# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 16 / 2016 நாள்: 01.10.2016

### பதட்டம் நிறைந்த வாக்குச்சாவடிகளில் வீடியோ கவரேஜ் மேற்கொள்ள மாநில தேர்தல் ஆணையம் உத்தரவு

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016-ல் இரு கட்டங்களாக நடைபெற உள்ளன. இத்தேர்தலில் நகர்புறத்தில் 28,761 வாக்குச்சாவடிகளும், ஊரகப்பகுதிகளில் 62,337 வாக்குச்சாவடிகளும் மற்றும் சென்னை மாவட்டம் உட்பட மொத்தம் 91,098 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

இவற்றுள், மொத்தம் 17,495 வாக்குச்சாவடிகள் பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளாக மாவட்டத் தேர்தல் அலுவலர்களால் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாக்குச்சாவடிகளில், வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்கவும், அசம்பாவிதங்களையும், முறைகேடுகளையும் கண்காணிக்க வீடியோ கவரேஜ் மேற்கொள்ள மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக மாநில தேர்தல் ஆணையம் மொத்தம் ரூ.337.41 லட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

மக்கள் தொடர்பு அலுவலர்